

காஞ்சிதலைவன் பேரறிஞர் அண்ணா அவர்களின் 57வது நினைவு தினத்தை முன்னிட்டு இந்து அறநிலையத் துறை சார்பில் ஈரோடு ஈஸ்வரன் கோயிலில் சமபந்தி விருந்து நடைபெற்றது. நிகழ்வில் அமைச்சர் சு.முத்துசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், இந்து சமய அறநிலையத்துறை அதிகாரி பரஞ்சோதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்ட அம்மா மக்கள் முன்னேற்றக் கழக இளைஞர் பாசறை மாவட்ட செயலாளர் சி.என்.எஸ்.வசந்த், தகவல் தொழில் நுட்ப பிரிவு மாவட்ட செயலாளர் தாராபுரம் ராதாகிருஷ்ணன், காங்கேயம் தொகுதி பொதுக்குழு உறுப்பினர் தங்கராஜ், காங்கேயம் ஒன்றிய துணை செயலாளர் கார்த்தி (எ) பரமசிவம், ஒன்றிய அண்ணா தொழிற்சங்க செயலாளர் செந்தில்குமார் ஆகியோர் அக்கட்சியில் இருந்து விலகி கழக துணை பொதுச் செயலாளர், அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கிழக்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் இல.பத்மநாபன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் காங்கேயம் நகர கழக செயலாளர் வசந்தம் நா.சேமலையப்பன், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.கே.சிவானந்தன், சி. கருணை பிரகாஷ், தாராபுரம் நகர்மன்றத் தலைவர் கு.பாபுக்கண்ணன் உள்ளனர்.

# தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு பங்கேற்பு!

தஞ்சாவூர். பிப். 9 -

தஞ்சை கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்ற தஞ்சை மத்திய மாவட்ட தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர்கள் அமைச்சர் கே.என். நேரு பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

மாவட்டக் கழக அவைத்தலைவர் சி.இறைவன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ கூட்டத்தின் தீர்மானங்கள் குறித்து விளக்க உரையாற்றினார்.

அதனை தொடர்ந்து கழக முன்மைச் செயலாளரும், அமைச்சருமான கே. என்.நேரு அவர்கள் சிறப்புரையாற்றினார். அப்போது தஞ்சையில் நடைபெற்ற வெல்லும் தமிழ் பெண்கள் மாநாட்டில் பணியாற்றிய கழக நிர்வாகிகளுக்கு நினைவு பரிசுகளை வழங்கி பாராட்டினார்.

இக்கூட்டத்தில் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எஸ்.எஸ். பழநிமாணிக்கம், முன்னாள் அமைச்சர் ஆர்.வைத்தியலிங்கம், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் து.செல்வம், எம்.இராமச்சந்திரன், கே.டி.மகேஷ்கிருஷ்ணசாமி, டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, மாநகரச் செயலாளர் சண்.இராமநாதன், மாவட்டக் கழக நிர்வாகிகள் எல்.ஜி.அண்ணா, அ.புண்ணியமூர்த்தி, என். மணிமாறன், கனகவள்ளி பாலாஜி, துணைமேயர் மரு.அஞ்சுகம் பூபதி, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் கழக உடன் பிறப்புகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மா னங்கள்

மார்ச் 1 -ல் முதல மைச்சர், கழகத்தலைவர் அவர்களின் 73 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மார்ச் மாதம் முழுவதும் ஆதரவற்றோர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள், மற்றும் மாணவ, மாணவிகள் விடுதிகளில் அறுசுவை உணவு வழங்குதல். மாவட்டதின் அனைத்து பகுதியிலும் கொடியேற்றி, இனிப்பு வழங்கி சிறப்பாக கொண்டாடுவதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

பேரறிஞர் அண்ணா அகலைஞர் மகளிர் உரிமைத் தொகை, கட்டணமில்லா விடியல் பேருந்து பயணம், ‘தோழி விடுதிகள்’, ‘புதுமைப்பெண் திட்டம்’, மகளிர் சுய உதவிக்குழுக்கள் என எண்ணற்ற மகளிர் மேம்பாட்டுத்திட்டங்களைச் செயல்படுத்தி, தமிழ்நாட்டுப் பெண்களை உலகளவில் ‘வெல்லும் தமிழ்ப்பெண்களாக’ மாற்றியுள்ள கழகத் தலைவர் அவர்களின் தலைமையில் 2026 சட்டமன்றத் தேர்தலில் வென்று திராவிட மாடல் 2.0 அமைந்திடும் வகையில் பிப்ரவரி 1 -ம் தேதி தொடங்கி மார்ச் 8 -ம் தேதி வரை ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் 10 மகளிர் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்கள் மூலம் அந்தந்த வாக்குச்சாவடிகளுக்குட்பட்ட வீடுகளில் வீடு வீடாகப் பரப்புரை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், கழக அரசின் மகளிர் நலத்திட்டங்களைஎடுத்துக்கூறியும், சாதனைத் திட்டங்களின் துண்டு பிரசுரங்கள் வழங்கியும் மக்களிடம் கழகத்திற்கான ஆதர வைத் திரட்டிட வேண்டும் எனவும், இந்தப் பரப்புரை மூலம் பெண்கள் வாக்குகள் சிந்தாமல் சிதறாமல் முழுமையாக கழத்திற்கு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

25.02.2026 அன்று திருவையாறு சட்டமன்ற தொகுதியிலும், 26.02.2026 அன்று தஞ்சாவூர் சட்டமன்ற தொகுதியிலும் தமிழ்நாடு தலை குனியாது பரப்புரை கூட்டத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் செயலாளார், திருச்சி சிவா எம்.பி சிறப்புரையாற்ற உள்ளார், இக்கூட்டங்ளை சிறப்பாக நடத்திடுவதென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

கழக வாக்குச்சாவடி நிலைய முகவர்கள் BLA2, 100 வாக்காளர்களுக்கு ஒருவர் என நியமிக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிக்குழு உறுப்பினர்கள் (BLC), மற்றும் வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் (BDA) ஆகியோரை தேர்தல் பணிக்கு முழுமையாக தயார் செய்யும் வகையில் பிப்ரவரி 21 அன்று மதுரையில் நடைபெறும் தெற்கு மண்டல மாநாட்டில் BLA2, BDA, BLC அனைவரும் தவறாது கலந்து கொள்வது என இக்கூட்டம் தீர்மா னிக்கிறது.

மருத்துவக்கல்லூரி மாணவர்களுக்கு மட்டும் இருந்த நீட் நுழைவு தேர்வை, பாராமெடிக்கல் மருத்துவ படிப்பிலும் புகுத்தி சமூக நீதியை ஒழிக்க நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கின்றது.

ஜனவரி 26.01.2026 அன்று தஞ்சாவூர், செங்கிப்பட்டியில் வெல்லும் தமிழ் பெண்கள் டெல்டா மண்டல மகளிர் மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பு செய்த தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கும், தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், கழக துணைப் பொதுச் ச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்களுக்கும் இக்கூட்டம் நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றது.

வெல்லும் தமிழ் பெண்கள் டெல்டா மண்டல மகளிர் மாநாட்டினை மிக சிறப்பாக நடத்திய மாண்புமிபு கழக முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு அவர்களுக்கு இக்கூட்டம் நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றது.

வெல்லும் தமிழ் பெண்கள் டெல்டா மண்டல மகளிர் மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைவருக்கும் இக்கூட்டம் நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றது.

மார்ச் 8 -ல் திருச்சியில் நடைபெறவுள்ள மாநில மாநாட்டிற்கு தஞ்சை மத்திய மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தொண்டர்கள் அனைவரும் அதிகளவில் கலந்து கொள்வதென இக்கூட்டம் இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

கழக முன்னோடிகளில் ஒருவரும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினரும், 1965 ஆம் ஆண்டு நடைபெற்ற மொழிப்போரினை வழி நடத்தியவரும், நாடாளுமன்ற, சட்டமன்ற, சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்தவருமான எல். கணேசன் அவர்களின் மறைவிற்கு இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கின்றது.

இவ்வாறு தஞ்சை மத்திய மாவட்ட பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

### திருவெறும்பூர் சட்டமன்றத் தொகுதியில்

# ரூ.1.80 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்பட்ட புதிய அரசு பொது மருத்துவமனை!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி திறந்து வைத்தார்!



திருச்சி, பிப். 9-

திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாநகராட்சி மண்டலம் 3க்கு உட்பட்ட வார்டு 37, 38, 39, 42. 43, ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காட்டூர் பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான தரம் உயர்த்தப்பட்ட அரசு பொது சுகாதார மருத்துவமனை வேண்டுமென தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சரும் திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழியிடம் கோரிக்கை வைத்திருந்தனர்.

மேலும் இதனையடுத்து தேசிய நகர்ப்புற சுகாதார திட்டம் ( 2023 24) ஆம் ஆண்டு நிதியாண்டின் கீழ் ரூபாய் ஒரு கோடியே 80 லட்சம் மதிப்பீட்டில் அதிநவீன பொது மருத்துவமனையை மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார் மேலும் இதே போல் அரியமங்கலம் மாநகராட்சிக்கு உட்பட்ட உள் அரியமங்கலத்தில் 30 லட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையம் மற்றும் திருவரம்பூர் மாநகராட்சிக் குட்பட்ட

வ உ சி நகர் பகுதியில் 30 லட்சம் மதிப்பீட்டில் புதிய துணை சுகாதார நிலையம் மற்றும் இதே போல் பொன்மலை பட்டி மாநகராட்சிக்குட்பட்ட ஜே ஜே நகரில் 30 லட்சம் மதிப்பீட்டில் புதிய துணை சுகாதார நிலையம் என 2 கோடியை 80 லட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற அரசு மருத்துவமனை மற்றும் துணை சுகாதார நிலையங்களை திறந்து வைத்து சிகிச்சைக்காக வந்த மக்களிடம் கோரிக்கைகளை கேட்டதுடன் மருத்துவமனையில் பராமரிப்பு பணிகளையும் பற்றியும் கேட்டறிந்தார் மேலும் இந்நிகழ்வில் மண்டலம் மூன்றின் தலைவர் மதிவாணன், மண்டல 3ன் துணை ஆணையர் சரவணன், உதவி செயற்பொறியாளர் ஜெகஜீவன் ராம் மாவட்ட நல அலுவலர் ஹேம்சந்த் காந்தி, மாநகர நல மருத்துவ அலுவலர் சுபாஷ் காந்தி, காட்டூர் மருத்துவ அலுவலர் கார்த்திகேயன், மற்றும் காட்டூர் பகுதி செயலாளர்கள் நீலமேகம், தர்மராஜ் சிவக்குமார் 43 வது வார்டு மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் செந்தில், 36 வது வார்டு மாமன்ற உறுப்பினர் கே. கே.கே கார்த்திக், உட்பட கழக நிர்வாகிகள் தொண்டர்கள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர் .

# சவுதி-பாகிஸ்தான் பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம் இந்தியாவுக்கு அபாயமா?

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. கேள்வி!



புதுடெல்லி, பிப். 9 -

சவுதி அரேபியா மற்றும் பாகிஸ்தான் இடையே கையெழுத்திடப்பட்டுள்ள பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், ஒன்றிய அரசின் கவனத்திற்கு கேள்வி கேட்டார்.

அந்த ஒப்பந்தம் குறித்து அரசு அறிந்துள்ளதா? அப்படியானால், அந்த நிலைமையை சமாளிக்க ஒன்றிய அரசு எடுக்கத் திட்ட மிட்டுள்ள நடவடிக்கைகள் என்ன? அல்லது, இதுகுறித்து அறியாததற்கான காரணங்கள் என்ன?

மேலும், இந்த பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம் இந்தியாவுக்கு குறுகிய காலத்திலும் நீண்ட காலத்திலும் ஏற்படுத்தக்கூடிய விளைவுகள் என்ன? எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்து பேசிய வெளியுறவு அமைச்சக அமைச்சர் கீர்த்தி வர்தன் சிங், சவுதி அரேபியா மற்றும் பாகிஸ்தான் இடையே ஒரு மூலோபாய பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளதாக வெளியான தகவல்களை ஒன்றிய அரசு கவனத்தில் எடுத்துள்ளது .

மேலும், இந்தியாவின் பாதுகாப்பை பாதிக்கக்கூடிய அனைத்து முன்னேற்றங்களையும் அரசு தொடர்ந்து கண்காணித்து வருகிறது.,

இந்தியாவின் தேசிய நலன்கள் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்ய தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் ஒன்றிய அரசு மேற்கொண்டு வருகிறது.

அத்துடன், பிராந்தியத்தில் உள்ள அனைத்து கூட்டாளி நாடுகளுடனும் இந்தியா தொடர்ந்து தொடர்பில் இருந்து வருகிறது எனவும் வெளியுறவு அமைச்சக அமைச்சர் விளக்கமளித்தார்.



நீலகிரி மாவட்டம் கட்டபெட்டு ஸ்ரீ அம்மன் தொழில்துறை பயிற்சி நிறுவனத்தில் (ITI) மாணவ, மாணவியர்களின் திறன் வளர்ச்சி மற்றும் டிஜிட்டல் முன்னேற்றத்திற்காக ”உலகம் உங்கள் கையில் எனும் திட்டத்தின் கீழ், அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் 12 மாணவ, மாணவியர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகளை வழங்கினார். இதில் கோத்தகிரி ஒன்றிய செயலாளர் நெல்லை கண்ணன், துணைச் செயலாளர் கணபதி, ஸ்ரீ அம்மன் ITI தாளாளர் முருகேசன்,கோவை SRS CONTROLLER உரிமையாளர் காளிதாஸ், காங்கிரஸ் பொதுக்குழு உறுப்பினர் கமலசீராளன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சென்னைப் பல்கலைக்கழகத்தில் முன்னாள் துணைவேந்தர் சே.சாதிக் அறக்கட்டளை சார்பில்

# பேராசிரியர் மா.செல்வராசன் சிறப்புரையாற்றுகிறார்!

## புரட்சிக் கவிஞர் என்னும் தலைப்பில் ஆய்வுரை!

சென்னை, பிப். 8-

இந்தியாவின் மூத்த பல்கலைக் கழகங்கள் மூன்றனுள் முதன்மையான சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தராகவும் அண்ணா பல் கலைக்கழக எம்.ஐ.டி இயக்குநராகவும் திறம்படப் பணியாற்றிய சிறப்புக்கு உரியவர் பேராசிரியர் சே.சாதிக் அவர்கள். இவர் ‘பேராசிரியர் சே.சாதிக் அறக்கட்டளை, என்னும் பெயரில் அறக்கட்டளை ஒன்று நிறுவியுள்ளார். அதற்காகத் தம் சொந்தப் பணம் ஐந்து இலட்சம் ரூபாவை பல்கலைக்கழகத் திற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

ஆண்டுதோறும் பேராசிரியர் சே சாதிக் அறக்கட்டளைச் சார்பில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பற்றிச் சொற்பொழிவு ஆற்றவேண்டும் என்று உறுதியுரை எழுதியுள்ளார்.

அவர் விழைவிற்கு ஏற்ப இந்த ஆண்டு அறக்கட்டளையின் முதற் சொற்பொழிவைச் சென்னைப் பல் கலைக்கழக ஆசிரியர் பேரவை மேனாள் தலைவர், சென்னைப் பல்கலைக்கழக இக்காலத் தமிழ் இலக்கியத் துறை மேனாள் தலைவர் பேராசிரியர் மா.செல்வராசன் ‘புரட்சிக் கவிஞர்’ என்னும் தலைப்பில் -ஆய்வுரை வழங்குகின்றார்.இவர் பாரதிதாசன் ஒரு புரட்சிக் கவிஞர் என்னும் பொருள் குறித்துப் பேராசிரியர் மு.வரதராசனார் மேற்பார்வையில் ஆய்வு நிகழ்த்தி 1974 ஆம் ஆண்டு பிஎச்.டி என்னும் முனைவர் பட்டம் பெற்றவர்.இதுவே பாரதிதாசன் பற்றிய முதல் முனைவர்(டாக்டர்) பட்ட ஆய்வு என்பது குறிக்கத்தக்கது!

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழித் துறை நடத்தும் இந்த அறக்கட்டளை நிகழ்ச்சி சென்னைப் பல்கலைக்கழக மெரீனா வளாகப் பவளவிழாக் கலையரங்கில் 10.02.2026 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறு கின்றது.

ஆர்வமுள்ளோர் கலந்து கொண்டு ஆய்வுச்சாறு அருந்தலாம் என்று சென்னைப் பல்கலைக்கழகம் அழைக்கின்றது.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், பர்கூர் சட்டமன்ற தொகுதிகுட்பட்ட, காவேரிப்பட்டிணம் கிழக்கு ஒன்றியம், நெடுங்கள், அகரம் மற்றும் பாரூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் மாணவ ,மாணவிகளுக்கு தமிழக அரசின் விலையில்லா மிதி வண்டிகளை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் வழங்கி சிறப்புரை ஆற்றினார் இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவை தலைவர் நாகராஜ் , பொதுக்குழு உறுப்பினர் நாகராசன், ஒன்றிய செயலாளர்கள் மகேந்திரன் , சாந்தமூர்த்தி பேரூராட்சித் தலைவர் தம்பிதுரை உள்ளிட்ட ஏராளமான இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



அரியலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சியில், செந்துறை துணை மின் நிலையத்தினை 110/33 KV தரம் உயர்த்தும் பணியையும் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி மற்றும் பலர் உள்ளனர்.